1990 ஏப்ரல் 3]

தொழில் நிறுவனங்களில் ஒழுங்கு விதிமுறைகள்.

*13. திரு. சி. கோவிந்தராஜன்:

மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தொழில் நிறுவனங்களில் முதலாளிகளுக்கும் தொழிலாளிகளுக்கும் ஏற்படுத்தப்பட்ட ஒழுங்கு விதிமுறைகளை (Code of Discipline in Industry) மீறும் முதலாளிகள் மீது நடவடிக்கை எடுக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஒழுங்கு விதித்தொகுப்பு (Code of discipline) தானாக (Voluntary) கடைப்பிடிக்க வேண்டிய ஒன்று. ஒழுங்குவிதிபற்றி சட்டம் இல்லாததால், சட்டப்படி நடவடிக்கை எடுக்க வழி வகை இல்லை.

திரு. சி. கோவிந்தராஜன்: தலைவர் அவர்களே, நான் இந்தச் சட்டமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தவுடன் போட்ட கேள்வி இது. கேள்வியினுடைய நம்பரைப் பார்த்தாலே அது தெரியும்—எண்.13. இப்போதாவது இது வந்ததற்கு என்னுடைய நன்றி தொழில் அமைதி ஏற்படுத்துவதற்காக 'ட்ரைபார்டியட் கமிட்டி' என்று ஒன்று இருக்கிறது. அதன் சார்பாக இரண்டு ஆண்டுகள், மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை இண்டியன் லேபர் கான்பரன்ஸ் கூட்டப்பட்டிருக்கிறது. பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் பிரதமராக இருந்தபோது 1958 ஆம் ஆண்டில் உத்தரப் பிரதேச மாநிலம் நைனிடாலில் நடைபெற்ற இந்தியன் லேபர் கான்ஃபிரஸில்தான் இப்படிப்பட்ட ஒழுங்கு விதிமுறைகள் ஏற்படுத்தப்பட்டன. அதிலே மைய, மாநில அரசுகளின் பிரதிநிதிகள், தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள், முதலாளிகளின் பிரதிநிதிகள் எல்லாம் சேர்ந்து அனைவராலும் இது ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிற ஒன்று. இதனுடைய அடிப்படையில்தான் இன்றைக்கு 'ஸ்டேட் எவாலுவேஷன்' அண்ட் இம்ப்ளிமெண்டேஷன் கமிட்டி' என்ற ஒன்று ஏற்படுத்தப்பட்டு, அது தொழிற்சங்கங்களுக்கு அங்கீகாரம் கொடுக்கக்கூடிய பிரச்சினைகளையும் கூட பரிசீலனை செய்து தீர்க்கிறது. அப்படித் தீர்க்கிறபோது இந்த 'எவாலுவேஷன் கமிட்டி' ஆலோசனையை முதலாளிகள் மறுக்கிறார்கள். ஈ.ஐ.டி. பாரி அங்கீகாரம் தர மறுக்கிறார்கள். ஒசூர் லேலண்டில் மறுக்கிறார்கள்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாவாகக் கேட்க வேண்டும்.

திரு. சி. கோவிந்தராஜன்: தலைவர் அவர்களே, அதை உடனடியாக, கறாராக அமல்படுத்த வேண்டுமென்று எல்லோரும் ஏற்றுக்கொண்டிருப்பதை அமல்படுத்த வேண்டுமென்பதற்கு அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

[1990 ஏப்ரல் 3

10.00 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் ஒப்புதலுடன் வினாக்கள்—விடைகள் நேரம் சில மணித்துளிகள் நீட்டிக்கப்பெறுகிறது.

மாண்புமிகு திரு. கே. என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது அரசினுடைய தொழிலாளர் ஆணையாளர் அவர்களைக் கொண்டும், தொழிலாளர் இணை ஆணையாளர் (சமரசம்) அவர்களைக் கொண்டும், இரண்டு குழுக்களாகக் கொண்டு, அவர்களுடைய தலைமையிலே முத்தரப்புக்குழு ஒன்று இருக்கிறது. இது அவர்களாகவே இந்த விதியைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதற்காக ஏற்படுத்தப்பட்ட ஒழுங்கு விதி. சட்டப்படி அவர்களை நீங்கள் செய்துதான் தீர வேண்டும் என்று சொல்வதற்கு சட்டம் இல்லை. ஆனாலும் இந்தக் குழு முடிவு செய்தபடி இதுவரையில் 116 பரிந்துரைகள் செய்யப்பட்டு இருக்கின்றன. ஆறே ஆறு தொழிற்சாலைகள் மட்டும்தான் அந்தப் பரிந்துரைகளை ஏற்கவில்லை, மீதமுள்ள அத்தனைத் தொழிற்சாலைகளும் இந்தக் குழுவினுடைய பரிந்துரையை ஏற்றுக்கொண்டு இருக்கின்றன.

மாண்புமிகு உறுப்பினர் சொல்வதைப் போல, E.I.D. Parry, Shaw Wallace & co., Salem Street Light plant, கும்பகோணம் கிராமிய மின்சாரச் சங்கம், Koilpatti Agricultural Research Station, Ashok Leyland என்ற இந்த ஆறு பேர்கள் மட்டும்தான் அந்தப் பரிந்துரையை ஏற்கவில்லை. இதற்கு என்று ஒரு தனிச் சட்டம், அவர்களை, நீங்கள் ஏற்றுக்கொண்டுதான் தீர வேண்டும் என்றுகான தனிச் சட்டம் இல்லாத காரணத்தால் தான் இதைப்போல ஏற்றுக்கொள்ள முடியவில்லை என்கிறபோது அரசால் ஒன்றும் செய்ய இயலவில்லை.

திரு. சி. கோவிந்தராஜன்: தலைவர் அவர்களே, பெருவாரியான நிறுவனங்கள் ஏற்றுக்கொண்டிருக்கும்போது, இந்த 6 நிறுவனங்கள் மட்டும் ஏற்றுக்கொள்ளவில்லை. அதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்ற முறையில்தான் நான் சொல்கிறேன். அப்படியானால் அந்த முடிவுகளை மீறக்கூடிய அளவிற்கு போகலாம் என்றால் நடவடிக்கை எடுக்க முடியாதென்றால் State Evalution Committee எதற்கு? அதற்கு என்று ஒரு சேர்மன், அதற்குரிய உறுப்பினர்கள். அது இரண்டு மாதங்களுக்கு, 3 மாதங்களுக்கு ஒரு முறை கூடுகிறது, அதற்கு பயணப்படி என்று இப்படி அரசுப் பணத்தை அனாவசியமாக விரயமாக்கவேண்டிய அவசியம் இல்லை. இப்போது Industrial Disputes Act, Sec. 25–T என்று திருத்தப் பிரிவு இருக்கிறது Unfair labour practices கீழ் வரக்கூடிய இப்படிப்பட்ட மீறல் செய்கைகளை செய்யும் நிறுவனங்கள் மீது இண்டஸ்ட்ரியல் டிஸ்ப்யூட் ஆக்ட் செக்ஷன் 25 T-படியாவது அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு அரசு முன்வருமா?

1990 ஏப்ரல் 3]

மாண்புமிகு திரு. கே. என். நேரு: தலைவர் அவர்களே, உறுப்பினருடைய கருத்தைப் பரிசீலனை செய்யலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. உரிமை மீறல் பிரச்சினை.

'தினமணி' நாளிதழ் மீது—இலங்கையிலிருந்து திரும்பிய இந்திய இராணுவம் குறித்து முதலமைச்சர் அவையில் பேசியதாக வந்துள்ள செய்தி குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என். கணபதி அவர்கள் ''தினமணி'' நாளிதழில் வந்துள்ள ஒரு செய்தி குறித்து, அவை உரிமை மீறல் பிரச்சினைக்கான அறிவிப்பைக் கொடுத்துள்ளார்கள். இது எவ்வாறு அவையின் உரிமையை மீறிய செயலாகும் என்பதைக் குறித்து மிகச் சுருக்கமாக விளக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. என். கணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமீபகாலமாக கடந்த சட்டமன்றக் கூட்டங்களில் இந்திய ராணுவத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வரவேற்காததற்கான காரணத்தைப் பற்றிய பிரச்சினை ஒரு பிரச்சினையாக இருந்து வந்தது. அந்தப் பிரச்சினையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் எடுத்துள்ள திட்டவட்டமாக அழுத்தந்திருத்தமாக சொல்லிய கருத்து, இந்திய இராணுவம் தான் என்று சொல்லி வந்து இருக்கிறார்களே தவிர, தனிப்பட்ட ஒருவரின் ராணுவம் என்றோ. படை என்றோ அதைச் சொல்லவில்லை. ஆனால், வேண்டுமென்றே. இந்த அவையில் உறுப்பினராக இருக்கின்ற மாண்புமிகு முதல்வர் அவர்களைக் களங்கப்படுத்தவேண்டும் என்று, செய்தியைத் திரித்துக் கூறுகின்ற முகத்தான் இல்லாததை இட்டுக்கட்டுகின்ற வகையிலே, இன்றைக்கு தினமணி பத்திரிகையிலே ஒரு செய்தி வந்திருக்கிறது. ஒன்பதாவது பக்கத்திலே, நேற்றைய தினம் சட்டமன்ற நிகழ்ச்சிகளைப் பற்றிய ஒரு செய்தி வெளியிட்ட இடத்தில், ''இந்திய ராணுவத்தை ராஜீவ் காந்தியின் படை என்று கருணாநிதி கூறியதைக் கண்டித்து மூப்பனார் பேசியுள்ளது குறித்து கதிரவன் பேசத் தொடங்கியதுமே'' என்று செய்தியை வெளியிட்டு இருக்கிறார்கள். அந்தச் செய்தியினுடைய அடிப்படை, ஏதோ மாண்புமிகு முதல்வர் அவர்கள், இந்திய ராணுவத்தை ராஜீவ் காந்தியின் படை என சொன்னதைப் போலவும் அந்தக் கருத்தையொட்டி, மூப்பனார்